

# ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ்தல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** கொலோ 3:18–4:6; எபே 5:22 25, 33; நீதி 22:6, 15; 1பேதுரு 2:16; 1தெச 5:17.

**மனன வசனம்:** அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சார மேறினதாயுமிருப்பதாக. கொலோசெயர் 4:6.

சேர்ந்து வாழும்போதும், ஒன்றாக வேலை செய்யும்போதும், பல்வேறு சிக்கல்கள் எழ வாய்ப்புள்ளன. கருத்துவேறுபாடுகள் பதற்றங்களை உண்டாக் கலாம்; வாக்குவாதங்கள் எழலாம். உறவின் நெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க, ஒவ்வொருவரும் அதற்கு ஈடுகொடுக்க வேண்டும்.

மிகநெருக்கமான உறவுகள் குடும்பத்திற்குள்தான் காணப்படும். குடும் பத்தை ‘குடும்ப நிறுவனம்’ என்றும் அழைப்பார்கள். ஒரு குடும்பத்தின் செயல் பாடுகளுக்கும், ஒரு நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. விழுமியங்கள், இலக்குகள், நோக்கங்கள் இடையே உடன்பாடு வேண் டும். எல்லாம் சுமுகமாக நடைபெறுவதற்கு ஒவ்வொருவரும் இணக்கமாக, தங் கள்தங்கள் பங்கைச் செய்யவேண்டும். இதே நியதிகள், மிகப்பெரிய குடும்ப மான திருச்சபைக்கும் பொருந்தும்.

இந்த வாரத்திற்கான ஆராய்ச்சி வசனங்களில், ஒரு கிறிஸ்தவக் குடும் பத்தின் மிகச்சிறந்த செயல்பாடுகளுக்கான முக்கிய நியதிகளை பவுல் முன் வைக்கிறார். கிறிஸ்தவக் குடும்பம் வேதாகம நியதிகளின் அடிப்படையில் செயல் படவேண்டும் என்பதால், இதன் செயல்பாடுகளுக்கும் ஒரு ரோமக்குடும்பத்தின் செயல்பாடுகளுக்கும் வித்தியாசம் உண்டு. குடும்பத்திற்கு உள்ளேயும் வெளி யேயும் காணப்படுகிற பல்வேறு சமூக உறவுகளுக்குத் தேவையான முக்கிய நியதிகளையும் பவுல் சொல்லுகிறார்.

***2026, மார்ச் 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# கணவர்களும் மனைவிகளும்

கிறிஸ்தவக் குடும்பங்களுக்கான பல்வேறு அறிவுரைகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. எபே 5:21-6:9; கொலோ 3:18-4:1; தீத்து 2:1-10; 1பேதுரு 2:18-3:7. இவை 'வீட்டுச் சட்டங்கள்' என்று அழைக்கப்படுகின்றன; ஆனால் இவை அதிகார வரிசை சம்பந்தப்பட்டவை அல்ல; மாறாக, இருபுற பரிமாற்ற, பரஸ்பர உறவுக்கான கூறுகளை உள்ளடக்கியவை.

**கொலோ 3:18,19 வலியுறுத்துகிற சமநிலை என்ன? எபே 5:22-25, 33இல் பவுல் கொடுக்கிற கூடுதல் ஆலோசனைகள் என்ன?**

கொலோ 3:18இல் உள்ள 'மனைவிகளே, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்' என்கிற வார்த்தைகளைமட்டுமே சில ஆண்கள் வாசிக்கிறார்கள்; 'கர்த்தருக்கேற்றபடி' என்று பவுல் சொல்வதைக் கவனிப்பதில்லை. எல்லா ஆண்களுக்கும் அவர்களது மனைவிமார்கள் கீழ்ப்படியவேண்டுமென புதிய ஏற்பாடு சொல்லவில்லை; மனைவிகள் கீழானவர்கள் அல்லது அடிமைகள் என்று அர்த்தமில்லை; கணவர்மாரின் ஒவ்வோர் ஆசைக்கும் விருப்பத்திற்கும் அவர்கள் கண்மூடித்தனமாகக் கீழ்ப்படியவேண்டியதில்லை. மனைவியின் முதலாவது மெய்ப்பற்று கர்த்தர்மேலும், பிறகு கணவன்மேலும் இருக்கவேண்டும். மனைவி தன் தனித்தன்மையை தன் கணவனுக்காக விடவேண்டியதில்லை; மனைவியின் மனச்சாட்சியாக கணவன் செயல்படவேண்டியதில்லை.

கிறிஸ்து தம்மையே கொடுக்குமளவிற்கு திருச்சபைமீது காட்டின அன்புதான், கணவன்மார் தங்கள் மனைவிகளை நேசிக்கவேண்டிய விதத்திற்கு எடுத்துக்காட்டு. எபே 5:25. என்ன விலையானாலும் உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள். மனைவியின் நலன்களை மனதில்வைத்து தீர்மானங்களைச் செய்வார்கள்; ஆனாலும் இருவரின் நோக்கங்களிலும் இணக்கம் இருக்கவேண்டும். இது போன்ற அன்புதான் மனைவி தேவ கட்டளைப்படி தன் கணவன்மேல் அன்புகூருவதை எளிதாக்குகிறது. ஒரு ஆரோக்கியமான கிறிஸ்தவ திருமண வாழ்வில் பரஸ்பரதன்மை காணப்படும். அதாவது, ஒருவரை ஒருவர் கலந்தாலோசிப்பார்கள்; சிந்தித்து தம்பதியராக தீர்மானங்களைச் செய்வார்கள். முழுக்குடும்பத்திலும் தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தீர்மானங்களைச் செய்யும்போது, அதற்கான கலந்தாலோசனைகளில் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும், ஆனால் பெற்றோர் அவர்களுக்குமுன் சண்டைபோடக் கூடாது. அந்தச் செயல்முறைக்குப் பிறகு, கணவனும் மனைவியும் ஒரு தீர்மானத்திற்கு வர முடியவில்லையென்றால், சமாதானமாகச் செல்வதற்கு வேதாகமம் சொல்கிற வழி என்ன தெரியுமா? கணவன் எடுக்கிற தீர்மானம் தேவ வார்த்தைக்கு எதிரானதாக இல்லாதிருந்தால், அதை மனைவி ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுபோல, எல்லாச் சமயங்களிலும் இல்லாவிட்டாலும், சில சமயங்களில் கணவர்மார் தங்கள் மனைவிகளின் தீர்மானங்களின்படி செய்து, அது நன்மையாக முடிந்த அனுபவங்களையும் காணமுடியும். கணவனும் மனைவியும் எவ்வளவு தூரம் ஓர் அணியாகச் சேர்ந்து வேலைசெய்கிறார்களோ, அவ்வளவு தூரத்திற்கு திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.

---

**ஆனாலும் வரலாறு முழுவதும் செய்யப்பட்டு வருகிற ஒரு தவற்றை நாம் எவ்வாறு தவிர்க்கலாம்? இந்த வசனங்களின் அருமையான நியதிகளை எவ்வாறு தீமையாக மாற்றாமல் இருக்கலாம்?**

# பெற்றோரும் பிள்ளைகளும்

குடும்ப நிறுவனத்தில் மிகமுக்கிய பங்குவகிப்பவர்கள் பிள்ளைகள். தாங்கள் குடும்ப அங்கத்தினர்கள், பரலோக குடிமக்கள், அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்கள் என்பதை அவர்கள் அறியவேண்டும். குடும்ப ஜெபம் மிகமிக முக்கியம்; காலையும் மாலையும் எளிமையாக, ஆனால் தவறாமல் குடும்ப ஜெபம் செய்யவேண்டும். சிறுவயதிலேயே வீட்டைச் சுத்தம் செய்வது போன்ற பொறுப்புகளைக் கற்றுக்கொடுக்கவேண்டும். 'பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது' என்று பவுல் சொல்கிற கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியவேண்டியது அவசியம்.

**பிள்ளைகளை வளர்ப்பதற்கு பின்வரும் வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள நியதிகள் என்ன?**

**நீதி 22:6,15**____________________

**மத் 19:14**____________________

**உபா 6:6,7**____________________

**நீதி 1:8,9**____________________

போதனை, முன்மாதிரிமூலம் கர்த்தருக்காக சரியாகப் பயிற்சியளிக்கப்பட்ட பிள்ளைகள், குடும்பத்திற்கும் சபைக்கும் அதற்கும் அப்பாலும் பயன்மிக்கவர்களாக இருப்பார்கள். பெற்றோருக்கு பவுல் கொடுக்கிற ஆலோசனையும் சமநிலையானது; இருபுற பரிமாற்றத் தன்மை உடையது: 'பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.' கொலோ 3:21. பெற்றோர், குறிப்பாக தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளுடன் பழகுகிற விதத்தையும், அவர்களை ஒழுக்கப்படுத்துகிற விதத்தையும் பொறுத்துதான் அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி அமையும்.

மேலும், பெற்றோரில் யாராவது ஒருவர் அல்ல, இருவரும் ஆலயம்செல்கிறவராக இருந்தால், பிள்ளைகளும் ஆலயம்செல்வதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. அதைவிட ஆச்சரியம், தாயைவிட தகப்பன் தொடர்ந்து ஆலயம்செல்கிறவராக இருந்தால், பெரும்பாலான பிள்ளைகள் தாங்கள் பெரியவர்களானபிறகும் ஆலயம்செல்கிறார்களாம். ஆகவே, தன் பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சியில் தகப்பனுடைய பங்கை குறைத்து மதிப்பிடவே முடியாது. எனவே, தகப்பன்மார் தங்கள் கடமைகளில் தீவிர கவனம் செலுத்தவேண்டியது எவ்வளவு முக்கியம்!

---

**ஆனாலும் எல்லா தகப்பன்மாருமே தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல முன்மாதிரிகளாக இருப்பதில்லை. தேவன் நம் பிதாவாக இருக்கிறார் என்பதை அறிந்திருப்பது, பூலோக தகப்பன்மார்களால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும்போது, அந்தக் காயம் ஆறுவதற்கு எவ்வாறு உதவியாக இருக்கிறது?**

---

# வேலை உறவுகள்

**அடிமைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகள் என்ன? கொலோ 3:22-25; 4:1. வேலை உறவுகள் சம்பந்தப்பட்ட நியதிகள் என்ன?**

வேதாகமம் முழுவதையும் குறைகூறாத சிலரும்கூட அடிமைகள் சம்பந்தப்பட்ட நியதிகள் கடந்தகாலத்திற்கு உரியவை என்று வாதிடுகிறார்கள். பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலிலும், புதிய ஏற்பாட்டு திருச்சபையிலும் இருந்த வரலாற்றுச்சூழலை கணக்கில் எடுக்காமல் இவ்வாறு பேசுகிறார்கள். மனிதர்கள் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டார்கள்; தேவனுடைய சகல அறிவு ஜீவிகளையும் போல சுதந்தரமாக வாழச் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். இஸ்ரவேலர்கள் நிரந்தரமாக அடிமைகளாக இருப்பதை மோசேயின் பிரமாணம் தடைசெய்தது. உபா 15:12. மேலும், வாங்கிய கடனை அடைப்பதற்காக அதிகபட்சம் ஆறு வருடங்கள்மட்டுமே அடிமைகளாக வைத்திருப்பதற்கு அனுமதித்தது. யாத் 21:2-6; லேவி 25:39-43. நவீனகால சிந்தனைக்கு, வேதாகம அடிமைமுறை விரும்பத்தகாத ஒன்றாகத் தெரியலாம், ஆனால் அது மேற்கத்திய உலகத்தில் காணப்படுவதுபோல வெறுக்கத்தக்க அடிமைத்தன நடைமுறைகளாக இருக்கவில்லை; மேற்கத்திய உலகில் அது மனுக்குலத்திற்கு எதிரான கொடிய, பயங்கரக் குற்றமாக இருந்தது.

புதிய ஏற்பாட்டு காலங்களில், ரோமச்சட்டத்தின் வரைமுறைகளுக்குள் திருச்சபை செயல்படவேண்டியிருந்தது; அந்தச் சட்டத்தின்படி அடிமைகளை வைத்திருப்பது அனுமதிக்கப்பட்டிருந்தது. ‘ஆனால், இன்றைய அடிமைத்தன முறைகளைப்போல அல்லாமல், ரோமச்சட்டமானது அடிமைகளுக்கு போதுமான உரிமைகளையும் வாய்ப்புகளையும் வழங்கியது; அந்தப் பழக்கத்தை ஒழிக்க முயன்றிருந்தால், அது சுவிசேஷம் பரவுவதற்கு அச்சுறுத்தலாக அமைந்திருக்கும்.’

ரோம சாம்ராஜ்ய அடிமைத்தன முறையைப்போல அல்லாமல், திருச்சபைக்குள்ளாக அடிமைகள் தேவனுக்கே முதற்கண் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருந்தது. எஜமான்கள் தங்களுக்கு ‘பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து,’ அவர்களை நியாயமாக நடத்தவேண்டியிருந்தது. கொலோ 4:1. மேலும், ஒநேசிமுவை அடிமையாக நடத்தாமல், சகோதரனைப்போல நடத்தும்படி பிலேமோனை பவுல் அறிவுறுத்தினார். பிலே 16. வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலுமே, விசுவாசிகள் தேவனுடைய அடிமைகள் அல்லது வேலைக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். சங் 34:22; லூக் 17:10; 1பேதுரு 2:16.

சில வேதாகம வசனங்கள் எழுதப்பட்ட கலாச்சாரச் சூழ்நிலைகள் நமக்குப் பிடிக்காவிட்டாலும்கூட, அந்த வசனங்களின் அதிகாரத்தை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். இல்லையென்றால், நம்மையும் நம் கலாச்சாரத்தையும் வேதாகமத்திற்கு மேலாக உயர்த்திவிடுவோம். வேதாகமத்தின் ஒரு கருத்தை வேதாகமம் முழுவதும் ஆராய்ந்தபிறகு, அதுபற்றிய ஒரு முடிவுக்கு வருவதே சிறந்த அணுகுமுறை.

---

**இந்த வசனங்களை உங்களுடைய வேலையிட உறவுகளில் எவ்வாறு பயன்படுத்தலாம்? ஒரு முதலாளியாக அல்லது தொழிலாளியாக இந்த நியதிகள் எவ்வாறு உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடும்?**

# ஒருவருக்காக ஒருவர் ஜெபித்தல்

**ஜெபம் சம்பந்தப்பட்ட என்ன நியதிகள் கொலோ 4:2-4இல் உள்ளன? பவுல் முன் வைக்கிற ஜெபவேண்டுகோள்கள் என்ன?**

---

---

குடும்பப்பிரச்சினை, பணப்பிரச்சினை, உடல்நலப்பிரச்சினை அல்லது வேறு ஏதாவது பிரச்சினையில் தவிப்பவர்களுக்கு நாம் சொல்லக்கூடிய மிகமுக்கிய மான வார்த்தைகள் 'நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்' என்பதுதான். ஜெபிப் பது ஒருவரோடு ஒருவர் பழகவும், தொடர்புகொள்ளவும் பரலோகம் தெரிந்து கொண்ட வழி. 'நாம் கேட்காவிட்டால் தேவன் கொடுத்திருக்காத ஒன்றை, விசு வாசத்தோடு கேட்டு ஜெபிக்கும்போது நமக்குக் கொடுப்பது தேவ திட்டத்தின் ஒரு பகுதி.'

ஜெபத்தை பவுல் வலியுறுத்துகிற விதத்தைக் கவனியுங்கள்: 'இடை விடாமல்' 'விழித்திருங்கள்,' 'ஸ்தோத்திரத்துடன்' ஜெபியுங்கள் என்கிறார்; நம் ஜெபம் விசுவாச ஜெபமாக இருக்கவேண்டுமென்று வலியுறுத்துகிறார். கொலோ 4:2. 'எந்தச் சமயத்திலும்' ஜெபியுங்கள், இடைவிடாமல் ஜெபியுங்கள்' என் கிறார். எபே 6:18; 1தெச 5:17. மேலும், 'நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக் குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.' ரோமர் 8:26.

**நீங்கள் உங்கள் விசுவாசத்தைச் சாட்சியிடுவதற்கு 'திருவசனம் செல்லும்படியான' எந்த 'வாசலை' தேவன் திறக்கவேண்டும்? கொலோ 4:4.**

---

பேசவேண்டிய பிரகாரமாய்ப் பேச உதவும்படியும் பவுல் ஜெபிக்கிறார். பவுல் தன் நிருபங்களிலும் அப்போஸ்தலர் நடவடிக்கையிலும், தான் சொல்ல வருகிற விஷயத்தில் எந்தச் சந்தேகமும் ஏற்படாமல், சொல்நயத்துடன் பேசி யிருப்பார். செய்தியை தான் 'தெளிவாய்' அறிவிப்பதற்கான திறமையை தேவன் தருமாறு தனக்காக ஜெபிக்கும்படி இங்கே கேட்கிறார். கொலோ 4:4. 'பேச வேண்டிய பிரகாரம்' என்கிற சொற்றொடரானது, சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு தெய்வீக உதவி தேவை என்பதைக் காட்டுகிறது. ராயனின் வீட்டார் உட்பட, ரோம அரசாங்கத்தின் உயர்மட்ட நபர்களுக்கும் அந்தச் செய்தியை அறிவிக்க வேண்டியதின் முக்கியத்துவத்தை பவுல் உணர்ந்திருந்தார்.

'ஜெபிப்பதற்கு எப்போதும் முழங்காலிட வேண்டியதில்லை. நீங்கள் தனி யாக இருக்கும்போதும், நடக்கும்போதும், அனுதின வேலையில் பரபரப்பாக இருக்கும்போதும் இரட்சகருடன் பேசுகிற பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங் கள். உதவியும் வெளிச்சமும் பெலனும் அறிவும் வேண்டி அமைதியான விண் ணப்பத்தை ஏறெடுத்தவாறு இருதயம் எப்போதும் அவரை நோக்கிப் பார்த் திருக்க வேண்டும்.'[1]

[1] Ellen G. White, The Ministry of Healing, pp. 510, 511.

# ஞானத்தோடு நடத்தல்

கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்துகொள்ளக்கூடிய மிகமுக்கியமான சத்தியம் எது? 'இயேசு நம் பாவங்களுக்காக மரித்தார், அவரை விசுவாசிப்பதன் மூலம் நித்திய ஜீவனைப் பெறமுடியும்' என்பதுதான். இந்த உண்மையை நாம் நாமாகவே ஒருபோதும் கண்டுபிடித்திருக்கமுடியாது. மாறாக, இந்த உண்மையை நமக்கு தேவன் வெளிப்படுத்த வேண்டியிருந்தது. அந்த வெளிப்படுத்தலை தேவனுடைய வார்த்தையில் பார்க்கிறோம்.

தேவன்மட்டும் தம்முடைய வார்த்தையில் நமக்கு வெளிப்படுத்தியிருக்காவிட்டால், நாம் அறிந்திருக்கவே முடியாத சத்தியமும் அறிவும் ஞானமும் உள்ளன. ஆனால் இந்த ஞானமும், அறிவும் நாம் அறிந்துகொள்ளும்படி வெறும் தகவலாகமட்டும் கொடுக்கப்படவில்லை. மாறாக, இந்த உண்மையையும் அறிவையும் ஞானத்தையும் நாம் நம்முடைய சொந்த வாழ்வில் வாழ்ந்து பார்க்கும்படி கொடுக்கப்பட்டுள்ளன.

**நாம் எந்தச் சூழ்நிலைகளில் 'ஞானமாய்' நடந்துகொள்ள வேண்டுமென்று பவுல் சொல்கிறார்? அதன் அர்த்தம் என்ன? கொலோ 4:5,6.**

சில சமயங்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் அவ்வாறு கொஞ்சங்கூட நடக்காதது வருத்தத்திற்குரியது! ஏசாயா 52:5ஐ மேற்கோள் காட்டி, அவிசுவாசிகளுக்கு இஸ்ரவேல் ஒரு தடைகல்லாக இருந்ததாக பவுல் சுட்டிக்காட்டினார்: 'தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே.' ரோமர் 2:24. நாம் மற்றவர்களிடம், குறிப்பாக நம் விசுவாசத்தைச் சேராதவர்களிடம் எவ்வாறு நடக்கிறோம் என்பது மிகவும் முக்கியம். தீத்து 2:5; 2பேதுரு 2:2. ஒரு கிறிஸ்தவச்சபைக் குடும்பமானது சேட்டைபண்ணுவதற்காக அல்லாமல் ஜெபத்திற்காகக் கூடுகிற வாலிபர்களை உடையதாக இருக்கவேண்டும்; இரக்கமான செயல்கள், அமைதி, பொறுமையான நடத்தைபோன்றவைதாம் நம் விசுவாசம் மெய்யானதா அல்லது பொய்யானதா என்று மற்றவர்கள் அறிந்துகொள்ள மிகப்பெரிய சாட்சிகளாக இருக்கின்றன.

**'உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாய் இருப்பதாக'** என்று பவுல் சொல்கிறார். கொலோ 4:6. நம் வார்த்தைகளில் அன்பும் பணிவும் காணப்படவேண்டும். அதற்கும்மேல், பரிசுத்த ஆவியானவரால், தேவ கிருபையால் தூண்டப்பட்டதாக, தேவ கிருபை ஊடுருவியதாக இருக்கவேண்டும்.

**'உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.'** உலகத்தின் பார்வையில் காரசாரமான என்பதற்கு வேறு அர்த்தம் இருக்கலாம்; ஆனால் நாம் யாரிடம் பேசுகிறோமோ அவர் மனதைத் தொடுவதற்கு ஏற்றதாக இருக்கவேண்டும் என்பதை இது காட்டுகிறது.

**'அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு.'** சரியான நோக்கத்திற்காக, சரியான நேரத்தில் சரியான வார்த்தைகளை ஆவியானவர்மட்டுமே கொடுக்கமுடியும்; நாம் சொல்ல 'வேண்டிய' செய்திக்கு, கேட்கிறவர்களின் மனதை ஆயத்தப்படுத்தமுடியும்.

---

**மற்றவர்களுக்குமுன்பாக எவ்வாறு பேசுகிறீர்கள், செயல்படுகிறீர்கள், நடக்கிறீர்கள்? உங்கள் விசவாசம், கிறிஸ்தவக் குணம்பற்றி என்ன செய்தியைக் காட்டுகிறீர்கள்?**

# மேலும் படிக்க:

'குடும்பத்தின் மகிழ்ச்சி, ஒழுங்கு, ஒழுக்கத்திற்கு உதவுவதில் தனிப்பட்ட விதத்தில் தங்களுக்கு பொறுப்பு இருப்பதை குடும்பத்தின் ஒவ்வோர் அங்கத்தினரும் உணரவேண்டும். ஒருவர் மற்றவருக்கு எதிராகச் செயல்படக்கூடாது. ஒருவருக்கு ஒருவர் ஊக்கமான நற்கிரியையில் எல்லாரும் இணைந்து செயல்படவேண்டும்; தயவாகவும் நீடிய சாந்தமாகவும் பொறுமையாகவும் இருக்கவேண்டும்; அமைதியான, மென்மையான குரலில் பேசவேண்டும்; குழப்பத்தை விளைவிக்கக்கூடாது; தாயின் பாரங்களை இலகுவாக்க, ஒவ்வொருவரும் தங்களால் இயன்றமட்டும் முயலவேண்டும்.

'மற்றவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதில் தன்னிடம் எதிர்பார்க்கப்படுகிற பங்கை குடும்பத்தின் ஒவ்வோர் அங்கத்தினரும் புரிந்துகொள்ள வேண்டும். ஆறு வயது சிறுவர்களிலிருந்து அனைவரும், வாழ்க்கையின் பாரங்களைப் பகிர்வதில் தங்களிடம் எதிர்பார்க்கப்படுகிற பங்கைப் புரிந்திருக்கவேண்டும்.'

'நாம் வெளிச்சத்தில் நடக்க விரும்பினால், நம் இருதயங்களிலும் குடும்பங்களிலும் கிறிஸ்துவை அனுமதிக்கவேண்டும். குடும்பம் என்றால், அந்த வார்த்தைக்கு ஏற்றபடி இருக்கவேண்டும். அது பூமியில் ஒரு குட்டிப்பரலோகமாக இருக்கவேண்டும், பாசங்களை வேண்டுமென்றே நசுக்காமல், அவற்றைப் பேணி வளர்க்கிற இடமாக இருக்கவேண்டும். அன்பையும் பரிவையும் ஒருவர்மீது ஒருவருக்குள்ள மெய்யான நன்மதிப்பையும் பேணிவளர்ப்பதில்தான் நம் மகிழ்ச்சி உள்ளது. நாம் நம் தேவைகளை மறந்து, மற்றவர்களிடமிருந்து நாம் பெற்ற சிறு நன்மைகளுக்குக்கூட நன்றிகாட்டுகிற வாய்ப்புகளைத் தேடவேண்டும், மேலும், மற்றவர்களைச் சந்தோஷப்படுத்தவும், கனிவான இரக்கமிக்க செயல்களாலும், சிறுசிறு அன்பான செயல்களாலும் அவர்களுடைய துக்கங்களையும்பாரங்களையும் இலகுவாக்கி, அகற்றுவதற்கான வாய்ப்புகளைத் தேடவேண்டும். நம் குடும்பங்களிலிருந்து நாம் துவங்குகிற சிந்தனைமிக்க மனிதாபிமான செயல்கள், குடும்ப வட்டத்திற்கு வெளியேயும் பரவி, வாழ்க்கையின் ஒட்டுமொத்த மகிழ்ச்சிக்குப் பங்களிக்கின்றன; இந்தச் சிறுசிறு காரியங்களைப் புறக்கணிப்பது வாழ்க்கையின் ஒட்டுமொத்த கசப்புக்கும் துக்கத்திற்கும் வலுசேர்க்கின்றன.'

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *திருமணமான தம்பதியரான உங்களுக்கு, உங்கள் உறவைப் பேண உதவின நியதிகள் யாவை? திருமணமாகாதவர்களுக்கு உங்களுடைய ஆலோசனை? திருமண வாழ்க்கை கொண்டு வருகிற சவால்களுக்கு அவர்கள் எவ்வாறு ஆயத்தப்படவேண்டும்?*

2 *அருமையான கிறிஸ்தவக் குடும்பத்தை உருவாக்கி, பிள்ளைகளை வளர்க்கிற அக்கறையுள்ள பெற்றோர், தங்கள் பிள்ளைகள் பெரியவர்களானபிறகு விசுவாசத்தை விட்டு வெளியே செல்கிற பிரச்சினையைக் கையாள வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு என்ன ஆலோசனையும் ஆறுதலும் நீங்கள் கொடுக்கலாம்? எதைப்பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது?*

3 *'ஞானமாய் நடந்து' என்பதைக் கலந்தாலோசியுங்கள். ஞானத்திற்கு எதிராக 'முட்டாள்தனமாக' நடப்பது என்றால் என்ன? ஞானமாய் நடக்காமல் முட்டாள்தனமாக நடந்துவிட்டதாக எண்ணின அனுபவங்களிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?*

# ‘சந்தர்ப்பத்தால் நடப்பது எதுவுமில்லை’

ரெனே பிலிப்பைன்ஸிற்குச் சென்ற சில நாட்களில், அட்ராவில் கணக்கராக வேலை செய்ய அழைப்பு வந்தது. ஒன்றரை வருடங்கள் அட்ராவில் வேலைசெய்தார், பிறகு எட்டு வருடங்கள் அட்வென்டிஸ்ட் சபையின் கேவைட் மிஷனில் கணக்கராக வேலைசெய்தார். அட்வென்டிஸ்ட் சபையில் வேலைசெய்வது பிடித்திருந்தது. வாழ்க்கை மகிழ்ச்சியாகச் சென்றது. சிறுவனாக இருந்தபோது, பணக்காரனாவதற்கு அட்வென்டிஸ்டாக மாறுவதுதான் வழியென நினைத்திருந்தார். இப்போது பணக்காரனாக வேண்டும் என்கிற ஆசை போனது. இயேசுவின் இரண்டாம் வருகை வரைக்கும் மற்றவர்களுக்கு ஊழியம்செய்ய விரும்பினார்.

ஒருநாள், 1000 ஊழியர்கள் இயக்கத்திலிருந்து ரெனேவுக்கு எதிர்பாராமல் ஒரு அழைப்பு வந்தது; அந்த இயக்கத்தின் பொருளாளர் ஓய்வுபெறவிருந்ததால், இவரை அந்த இடத்திற்கு அழைத்தார்கள். அந்த இயக்கம், அட்வென்டிஸ்ட் சபையின் தென் ஆசிய–பசிஃபிக் டிவிஷனால் நடத்தப்படுகிற ஓர் ஊழிய இயக்கம். கேவைட் மிஷனைச் சேர்ந்த ஒரு நகரமான ஸிலாங்கில் உள்ள அதன் தலைமையகத்தில், ஒவ்வொரு வருடமும் நூற்றுக் கணக்கான ஊழியர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

அந்த அழைப்பைக் கேட்டதும் ரெனேவால் நம்பவே முடியவில்லை. ரோடல் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்தான்; அவரது நட்புதான் இவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள உதவியது. எனவே, அந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக இருப்பது எப்போதுமே அவரது கனவாக இருந்தது.

ரோடல் இப்போது பிலிப்பைன்ஸில் அபிஷேகிக்கப்பட்ட போதகராக இருந்தார்; ரெனே அதன் பொருளாளராகப் போவதை அறிந்தால், நிச்சயம் மகிழ்ச்சியடைவார். ஆனால், ‘நான் வெறும் கணக்காளர்தானே, பொருளாளர் வேலையை என்னால் செய்யமுடியுமா?’ என்று யோசித்தார்.

அன்று இரவு, 1000 ஊழியர்கள் இயக்கத்தில் தான் வேலைசெய்வதுபோல ரெனே கனவு கண்டார். பிறகு, தென் ஆசிய–பசிஃபிக் டிவிஷனின் தலைவர் அந்த வேலைக்கு விண்ணப்பிக்குமாறு ரெனேவிடம் கூறினார். சில நாட்கள் கழித்து, டிவிஷன் கமிட்டி அவரது விண்ணப்பத்தை ஏற்றது, அவருக்கு வேலை கிடைத்தது.

அதன்பிறகு ரெனே பின்னிட்டுப் பார்க்கவே இல்லை. தேவனுக்கு உண்மையாக இருந்தார், முன்பு அவரைப் புறக்கணித்த உறவினர்கள் அட்வென்டிஸ்ட் சபையில் சேர்ந்தார்கள். அவர் பிலிப்பைன்ஸுக்குச் சென்று இரண்டு மாதங்கள் கழித்து, அவரது பெற்றோர் ஞானஸ்நானம் பெற்றாரக்ள். “அது தேவன் எனக்குக் கொடுத்த பரிசு. ‘நீ எனக்கு உண்மையுடன் இருந்ததால், உனக்கு நான் கொடுக்கிற பரிசு’ என்று தேவன் என்னிடம் சொல்வதுபோல இருந்தது” என்று சொன்னார். அவருடைய இரண்டு சகோதரிகளும்கூட ஞானஸ்நானம் பெற்றார்கள்.



அந்தச் சமயத்தில், அவர் வெளிநாட்டில் முன்பு வேலைசெய்த அந்த நிறுவனம், கோவிட்–19 பெருந்தொற்றால் திவாலானது. சம்பள உயர்வை ஏற்றுக்கொண்டு அங்கே இருந்திருந்தால், எல்லாவற்றையும் இழந்திருப்பார். இன்று, எல்லா துதியும் தேவனுக்கே என்று சொல்லுகிறார். “எதுவே சந்தர்ப்பத்தால் நிகழ்வதில்லை, தேவன் எனக்கு ஒரு திட்டம் வைத்திருந்தார்” என்று ரெனே சொன்னார்.